திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, 12½ ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்குமேல் நிலங்கள் வைத்திருப்பவர்கள் விவசாய வருமான வரி கட்டி வந்தார்கள். இப்போது அந்த உச்சவரம்பை 7½ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்கிவிட்டீர்கள். இதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மீண்டும் அதை 12½ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உயர்த்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்போதைக்கு இல்லை.

Compaints against Special Commercial Tax Officer, Tirunelveli.

*71 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether a petition, dated 9th May 1970 has been received from a few villagers of Rajakrishnapuram in Nangunery taluk of Tirunelveli district regarding the corrupt practices of the Special Commercial Tax Officer, Tirunelveli; and

(*b*) if so, whether any action has been taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) மனுவில் அடங்கியுள்ள குற்றச்சாட்டுகள் புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

Appointment of Government Pleader for Madras City.

*72 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint a Government Pleader for Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Industrial Estate at Hosur.

*73 *Q.*—Thiru B. VENKATASAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start an Industrial Estate at Hosur in Dharmapuri District; and

(*b*) if so, when it will be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

Thiru K. S. KOTHANDARAMIAH : The sanction of industrial estate at Hosur is pending for the last so many years May I know from the Hon. Minister when he is going to sanction it?